ஆராயவேண்டுமானால் பப்ளிசிடி டிபார்ட்மெண்ட் மூலமாக நல்ல முறையிலே அவர்களைத் தேர்ந்தெடுக்க முடியும் என்ற காரணத்தினால்தான் இதை சர்க்காரே வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

SRI M. KALYANASUNDARAM : இப்பொழுது இருக்கும் ஜில்லா விளம்பர அதிகாரிகளில் எத்தனை பேர் நேரடியாக நியமனம் செய்யப்பட்டவர்கள் ? அவர்களில் எவ்வளவு பேர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ? மற்றக் கட்சிகளில் இருந்து வேறு யாராவது எடுக்கப்பட்டிருக்கிறார்களா ? அப்படி இருந்தால் எத்தனை பேர் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

Appointment of persons belonging to certain political parties

* 5 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have given any directions to the Public Service Commission not to recruit persons who belong to certain political parties for Government appointments; and

(b) if so, the names of those political parties?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Certainly not, Sir.

(b) Does not arise.

SRI A. GOVINDASAMY : கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஒரு அம்மையார் கெஜட் பதிவுள்ள உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கம்யூனிஸ்டு கட்சியில் முன்பு சேர்ந்து இருந்திருக்கலாம். சர்க்கார் உத்தியோகத்துக்கு வந்த பிறகு அரசியல் கட்சிகளில் ஈடுபட்டிருக்கக்கூடாது. ஈடுபட்டிருந்தால். அது பற்றிக்கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

SRI N. K. PALANISAMI : சர்விஸ் கமிஷன் ஒரு autonomous body-யாக இருப்பதனால், முற்போக்குக் கொள்கையுடையவர்களை தேர்ந்தெடுக்காமல் விட்டுவிடக்கூடாது என்பது இந்தச் சபையினுடைய அபிப்பிராயம் என்று சிபாரிசு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தச் சபையினுடைய அபிப்பிராயத்தைப் பற்றிச் சொல்லமுடியாது. முற்போக்குக் கொள்கை என்று சொல்லப்படுகிறவர்களுடைய கொள்கைகூட பிற்போக்குக் கொள்கையாக இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, மற்றக் கட்சிகளில் தொடர்பு கொண்டிருப்பவர்களைக்கூட அரசாங்கப் பதவிகளில் நியமிப்பதன் மூலம் அவர்களுடைய எதிர்ப்புச் சக்தியை மழுங்க வைத்துவிடலாம் என்பதை அரசாங்கம் ஒரு ராஜதந்திரமாகக் கருதிக் கொண்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

Rent Control Act

* 6 Q.—SRI V. K. KOTHANDARAMAN ! கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லாவில் எந்தெந்த பிரதேசங்களில் சென்னை நகர பகுதி மனைக்குடி இருப்போர் பாதுகாப்புச் சட்டம் அமுலில் உள்ளது?